1993 அக்டோபர் 27]

41—

நந்தம்பாக்கம் பர்மா கலானிக்கு குடிசை மாற்று வாரியத் திட்டம்

*10192—திரு. எஸ். அண்ணாமலை: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலந்தூர் தொகுதி, நந்தம்பாக்கம், பர்மா காலனிக்கு குடிசை மாற்று வாரியத்தின் திட்டத்தை அமுல்படுத்த அரசு முன்வருமா?

முற்பகல் 11–15.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

---

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

## 2. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தேர்வுக்கான வேட்பு மனு பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருந்த 26–10–1993 ஆம் தேதி நண்பகல் 12–00 மணி வரை ஓரே ஒரு நியமனத்தாள் மட்டும் செயலாளரால் பெறப்பட்டுள்ளது.

பேரவையின் விதி 7 (4)-ன்படி இப்பதவிக்கு நியமனம் செய்யப் பெற்றவர், முன் மொழிந்தவர், வழி மொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை முதலில் நான் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு:—

நியமனம் செய்யப் பெற்றவர்: திரு. ச. காந்திராஜன் (மேசையைத் தட்டும் ஒலி.)

முன் மொழிந்தவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

வழி மொழிந்தவர்: மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி.)

ஒரே ஒரு உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பட்டு இருப்பதால் திரு. ச. காந்திராஜன் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

பேரவை விதி 6-ன்படி துணைத் தலைவருக்குப் பேரவையின் பிளாக் 1, இருக்கை எண் 2 ஒதுக்கப்படுகிறது. தற்போது, அவர் அந்த இருக்கையில் வந்து அமரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

## 3. பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. சி. காந்திராஜன் அவர்களுக்கு வாழ்த்துரைகளும், துணைத் தலைவரின் ஏற்புரையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு திரு. ச.காந்திராஜன் அவர்கள் ஒருமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தச் செய்தியை அறிவிக்கிற வாய்ப்புப் பெற்றதில் உள்ளபடியே பெருமகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.) என்னுடைய அரசியல் பணியில், தன்னுடைய இளமைக் காலம் முதல் கொண்டு எனக்குத துணை இருந்த ஒரு சகோதரர் இன்றைக்குப் பேரவையை நடத்திச் செல்வதிலேயும் எனக்குத் துணையாக வந்து கிடைத்திருப்பதில் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். நல்ல வழக்கறிஞராக சகோதர வாஞ்சையோடு அனைவரிடத்திலேயும் நெருங்கிப் பழகுகிற இயற்கையான குண நலன்கள் கொண்டவராகத திகழ்ந்து வந்திருக்கிற காந்திராஜன் அவர்கள் தன்னுடைய அரசியல் பணியில் பள்ளிப் பருவ காலத்திலிருந்தே ஈடுபட்டவர். அந்த வகையில் இளமைக்காலத்திலேயே அரசியலில் ஈடுபட்டு இருந்தாலும், ஒரு மூத்த அரசியல்வாதிக்கு இருக்கிற தன்னம்பிக்கையோடும், அந்த அளவுக்கு அனுபவங்கள் பெற்றவரைப் போன்று பல்வேறு சந்தர்ப்பங்களில் பணியாற்றி வந்திருக்கிறார். அந்த இனிய சகோதரர் இன்றையதினம் பேரவைக்குத் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு நமக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். நல்ல வழக்கறிஞராக வழக்கு மன்றங்களில் பணியாற்றிக் கொண்டிருந்தவர், அரசியல் பணி காரணமாக தன்னுடைய வழக்கறிஞர் தொழிலிலே இருந்து ஒதுங்கிக் கொள்ளாமல், அதற்குரிய நேரத்தையும் தனக்கு ஒதுக்கிக் கொண்டு, வழக்கறிஞர் பணியையும் சிறப்புற ஆற்றி வந்திருக்கிறார்.